Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 241 | உள்ளூர் - 29.08.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 241 | வெளியூர் - 30.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

தங்கம், வெள்ளி யார் அணியலாம்? அணியக்கூடாது?

டி.எம்.பி. வங்கியில் வேலைவாய்ப்புகள்!

நேபாள வெள்ளம்: பலி; 626 மாயம் 2,500

அனைத்து அரசு பேருந்துகளிலும் இலவச பயணம்?

# மோடி வெளிநாட்டுப் பயணம்: SCO மாநாட்டில் பங்கேற்பு!

புதுடெல்லி, ஆக. 29–

**பயணக் காலம்:** பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 29 அன்று தனது அரசு முறைப் பயணத்தைத் தொடங்கி, செப்டம்பர் 1–ஆம் தேதி டெல்லி திரும்புகிறார்.

**உஸ்பெகிஸ்தான் பயணம்:** அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவின் அழைப்பின் பேரில் உஸ்பெகிஸ்தான் செல்லும் பிரதமர், இரு தரப்பு உறவு, வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல், எரிசக்தி மற்றும் கல்வி குறித்து விவாதிக்கிறார்.

**நினைவிடங்கள்:** தாஷ்கண்ட்டில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி நினைவகம் மற்றும் தாஷ்கண்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள மகாத்மா காந்தி மையம் ஆகியவற்றிற்கு பிரதமர் மோடி செல்ல உள்ளார்.





**கிர்கிஸ்தான் பயணம்:** ஆகஸ்ட் 31 அன்று கிர்கிஸ்தான் நாட்டின் பிஷ்கெக் நகருக்குச் செல்கிறார். அந்நாட்டு அதிபர் சதிர் ஜபரோவ் அழைப்பின் பேரில் அங்கு நடைபெறும் 26–வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

# ஜி20 கூட்டத்திற்காக அமெரிக்கா சென்றடைந்தார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்...!

புதுடெல்லி, ஆக. 29–

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆறு நாள் பயணமாக அமெரிக்கா சென்றடைந்தார். இந்த பயணத்தின் போது, அவர் ஜி20 நிதியமைச்சர்களின் கூட்டத்தில் பங்கேற்பதுடன், முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விவாதிக்க பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் மற்றும் வணிக தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.



கனடாவில் நடைபெற்ற முதல் ‘இந்தியா–கனடா பொருளாதார மற்றும் நிதிசார் கலந்துரையாடல்’ நிகழ்வில் பங்கேற்ற பிறகு, மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு நிர்மலா சீதாராமன் சிகாகோவின் ஓ’ஹேர் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, இந்திய தூதரகத்தின் துணை தூதர் நம்க்யா சி. கம்பா மற்றும் சிகாகோவிற்கான இந்திய தூதரக அதிகாரி சோமநாத் கோஷ் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

சீதாராமன் கனடா மற்றும் அமெரிக்காவில் ஒன்பது நாள் கூட்டுப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்; இப்பயணம் செப்டம்பர் 2–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

சிகாகோவில் தங்கியிருக்கும் காலத்தில், அவர் முக்கிய முதலீட்டாளர்களுடனான மாநாட்டில் பங்கேற்பதுடன், தனியார் துறையை சேர்ந்த முன்னணி தலைமை செயல் அதிகாரிகள், தலைவர்கள் மற்றும் மூத்த பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடுவார் என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகள், பொருளாதார கண்ணோட்டம் மற்றும் இந்தியா–அமெரிக்கா இடையிலான வணிக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்த விவாதங்கள் இதில் இடம்பெறும்.

மேலும், சிகாகோ பல்கலைக்கழகத்தில் உள்ள ‘போல்ஸ்கி தொழில்முனைவு மற்றும் புத்தாக்க மையத்தை’ பார்வையிடும் அவர், தொழில்முனைவு, புத்தாக்கம், தொழில்நுட்ப வணிகமயமாக்கல் மற்றும் இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் ஸ்டார்ட்–அப் மற்றும் புத்தாக்க சூழலுடனான தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்த கருத்துக்களை பரிமாறி கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மத்திய நிதியமைச்சர் சிகாகோவில் உள்ள இந்தியச் சமூகத்தினருடன் கலந்துரையாடுவார். அமெரிக்காவின் தலைமையில் வட கரோலினாவின் ஆஷ்வில் நகரில் நடைபெறவுள்ள ஜி20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில் இந்திய குழுவிற்கு அவர் தலைமை தாங்குவார்.

ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், ஜி20 உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் மூத்த பொருளாதார அதிகாரிகள் ஒன்றிணைந்து, முக்கிய உலகளாவிய பொருளாதார மற்றும் நிதிசார் விவகாரங்கள் குறித்து விவாதிப்பார்கள் என்று அந்த அறிக்கை கூறியது.

# டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை செய்வதற்கு முன் 2 முறை சரிபார்க்கவும்! ரிசர்வ் வங்கி!

ஏதேனும் ஒரு டிஜிட்டல் பணப்பரிமாற்ற செயலி அல்லது வங்கியின் இணையதளம் மூலம் பணப்பரிமாற்றத்தை செய்வதற்கு முன் இரண்டு விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியிருக்கிறது.

பணப்பரிமாற்றம், வங்கிக் கணக்கு, சைபர் மோசடிகள் குறித்து ரிசர்வ் வங்கி மக்களுக்கு அவ்வப்போது அறிவுறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றன.



வாட்ஸ்ஆப் வழியாக பல்வேறு அறிவுறுத்தல்களை மேற்கொண்டு வரும் ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டிருக்கும் தகவலில் முக்கியமான ஒரு எச்சரிக்கையை கொடுத்துள்ளது.

டிஜிட்டல் முறையில் பேமெண்ட் (digital payment) செய்கிறீர்களா?

ஒவ்வொரு முறை டிஜிட்டல் பேமெண்ட் செய்வதற்கு முன்பும், கீழே உள்ளவற்றை இரண்டு முறை சரிபார்க்கவும்:

நீங்கள் பணம் அனுப்ப விரும்பும் நபரின் பெயர், அதாவது பயனாளியின் பெயர்

நீங்கள் பரிமாற்றம் செய்ய விரும்பும் தொகை

டிஜிட்டல் பேமென்ட் செய்துகொண்டே இருங்கள், ஆனால்... கொஞ்சம் கவனமாக!! இருங்கள் என்று தெளிவாகக் கூறியிருக்கிறது.

அதாவது, ரிசர்வ் வங்கி (RBI) சொல்கிறது, விவரமாக இருங்கள், விழிப்புடன் இருங்கள் என்று மக்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. ஏனெனில், தவறான நபருக்கோ, தவறான தொகையையே அனுப்பிவிட்டால் அதனை மீண்டும் பெறுவது அவ்வளவு எளிதல்ல. எனவே சரியாக மிக நிதானமாக இரண்டையும் சரிபார்த்துக் கொண்டு பணப்பரிமாற்றத்தை உறுதி செய்துகொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறது. நாமும் இதனை நிச்சயம் பின்பற்ற வேண்டும்.

## உலகின் மாபெரும் எண்ணெய் ஒப்பந்தம்!

# எண்ணெய் உலகில் டிரம்பின் அதிரடி! வெனிசுலாவின் பிரமாண்ட எண்ணெய் வளம்

## அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்!!

வாஷிங்டன், ஆக. 29–

அமெரிக்கா மற்றும் வெனிசுலா இடையே உலக வரலாற்றிலேயே மிகப்பெரிய எண்ணெய் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். வெனிசுலாவில் உள்ள 6,500 கோடி பேரலுக்கும் அதிகமான உறுதி செய்யப்பட்ட எண்ணெய் இருப்பில் பெரும்பான்மையான கட்டுப்பாட்டை அமெரிக்கா பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, போர் விவகாரங்களுக்கான அமைச்சர் பீட் ஹெக்செத் மற்றும் வெனிசுலாவின் இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் ஆகியோரின் பேச்சுவார்த்தை மூலம் இந்த ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டதாக டிரம்ப் கூறியுள்ளார். தனியார் வணிகக் கூட்டாண்மை வாயிலாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், அமெரிக்க வரி செலுத்துவோரின் பணம் பயன்படுத்தப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் எண்ணெய் இருப்பை இருமடங்குக்கும் மேலாக உயர்த்தும் என்றும், எதிர்காலத்தில் அமெரிக்க மக்களுக்கு எரிபொருள் விலையை கணிசமாகக் குறைக்க உதவும் என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார். மேலும், வெனிசுலா பொருளாதார ரீதியாக முன்னேறவும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுப்பெறவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்க ராணுவம் கைது செய்து அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றதாக கூறப்பட்ட பின்னர், கராகஸ் அரசுடனான உறவை மறுசீரமைப்பதிலும், அந்நாட்டின் எண்ணெய் துறையில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை அதிகரிப்பதிலும் வாஷிங்டன் தீவிரம் காட்டி வந்ததாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உயர்ந்து வரும் எரிபொருள் விலையை கட்டுப்படுத்த வேண்டிய சூழலில் இந்த ஒப்பந்தம் டிரம்ப் நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளால் எரிபொருள் விலை உயர்ந்து வரும் நிலையில், அமெரிக்கா தனது மூலோபாய பெட்ரோலிய இருப்பிலிருந்தும் எண்ணெயைப் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒப்பந்தத்தில் பங்கேற்கும் நிறுவனங்கள், எண்ணெய் வளத்தின் மீதான அமெரிக்காவின் கட்டுப்பாடு எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பது உள்ளிட்ட முழுமையான விவரங்கள் இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. இதனால் ஒப்பந்தத்தின் சட்டரீதியான மற்றும் அரசியல் தாக்கங்கள் குறித்து எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் நீர்திறப்பு அதிகரிப்பு!

பெங்களூரு, ஆக. 29–

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கர்நாடகாவின் முக்கிய அணைகளான கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் இந்த அணைகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு காவிரியில் நீர் திறக்கப்பட்டு வருகிறது.

கர்நாடக அணை களில் இருந்து காவிரியில் நீர்திறப்பு தற்போது அதிகரிக்கப்பட்டு உள்ளது. கே.ஆர். எஸ். அணையில் இருந்து வினாடிக்கு 2,498 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது 4,812 கன அடியாக அதிகரிக்க ப்பட்டுள்ளது. அதேபோல கபினி அணையில் இருந்து 6,100 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது 6,600 கன அடியாக அதிகரிக்கப்ப ட்டுள்ளது. மொத்தமாக கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் தமிழ்நாட்டுக்கு 11,321 கன



அடி தண்ணீர் தற்போது திறக்கப்பட்டு வருகிறது. காவிரியில் நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், தமிழக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# மணிப்பூரில் மர்மநபர்கள் திடீர் தாக்குதல்: பள்ளி முதல்வர் உள்பட 4 பேர் சுட்டுக் கொலை!

மணிப்பூர், ஆக. 29–

மணிப்பூரில் கடந்த சில ஆண்டுகளாக அவ்வப்போது வன்முறை சம்பவங் கள் அரங்கேறி வருகின்றன. அங்குள்ள காங்போக்பி மாவட்டத்தில் மர்ம நபர்கள் திடீர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் மீண்டும் பரபரப்பை ஏற்ப டுத்தியது. நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மகுய் ஆஷாங் மற்றும் தனம்பா நாகா கிராமங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் ஒரு வாகனம் சென்று கொண்டிருந்தது. அங்கு மறைவான பகுதியில் பதுங்கியிருந்த சிலர் ‘ அந்த வாகனத்தை வழிமறித்து திடீர் துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டனர். இதில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் காயமடைந்தார். இதுபற்றி தகவல் அறிந்த போலீசார் மற்றும் பாதுகாப்பு படையினர் அங்கு விரைந்தனர். வழியில் ஏற்பட்ட தடையால் அவர்களால் சம்பவ இடத்தை அடைய முடியவில்லை.இந்த நிலையில் நேற்று காலையில் பாதுகாப்பு படையினர் சம்பவ இடம் சென்று அங்கு இறந்து



கிடந்தவர்களின் உடல்களை மீட்டனர். கொல்லப்பட் டவர்கள் சாவாங்சினிங் கிராம நிர்வாகத் தலைவர் விஸோபவ் சாரெனாமை, தனியார் பள்ளி நிறுவனர்–முதல்வரான தட்ஸோங்பவ் ரிங்கள்மாய், மற்றும் இருவர் என்று அடையாளம் காணப்பட்டது. அனைவரும் லியாங்மாய் நாகா சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

குக்கி தேசிய முன்னணி (பி), குக்கி புரட்சிகர ராணுவம் ஆகிய அமைப்புகளுக்கு இந்த தாக்குதலில் தொடர்பு இருப்பதாக ஐக்கிய நாகா கவுன்சில் குற்றம்சாட்டியுள்ளது. தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

# தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 29.08.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆவணி மாதம் 12-ம் தேதி

## AI–க்கு கடிவாளம் தேவை!




மனிதர்களின் கட்டுப்பாட்டை மீறத் தொடங்கும் செயற்கை நுண்ணறிவு... எதிர்காலத்திற்கு எச்சரிக்கை மணி!

செயற்கை நுண்ணறிவு எனப்படும் AI, மனித வாழ்க்கையை எளிதாக்குவதற்காக உருவாக்கப்பட்டது. ஆனால், மனிதர்கள் கொடுத்த கட்டளைகளையே மீறி AI அமைப்புகள் தன்னிச்சையாக செயல்படத் தொடங்கினால், அது தொழில்நுட்ப வளர்ச்சி மட்டுமல்ல... பெரும் ஆபத்துக்கான தொடக்கமாகவும் அமையக்கூடும்.

சமீபத்தில் வெளியாகியுள்ள தகவல் தொழில்நுட்ப உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. OpenAI–யின் 1,000–க்கும் மேற்பட்ட AI ஏஜென்ட்கள், சோதனைச் சூழலில் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளை மீறி, ஒன்றிணைந்து செயல்பட்டு Hugging Face நிறுவனத்தின் கணினி அமைப்புகளை குறிவைத்ததாகக் கூறப்படுகிறது.

இதில் கவலைக்குரிய விஷயம், AI ஏஜென்ட்கள் தனித்தனியாக செயல்படாமல், ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்பட்டதாகக் கூறப்படுவதுதான். பாதுகாப்பு அமைப்புகளில் ஏற்பட்ட சில Misconfiguration குறைபாடுகளைப் பயன்படுத்தி, தங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீற முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**கட்டுப்பாட்டை மீறினால்?**

AI ஏஜென்ட்களுக்கு இன்று பல்வேறு பணிகளை தானாக முடிவு செய்து செயல்படுத்தும் திறன் வழங்கப்படுகிறது. இந்த சுதந்திரம் நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையில், அவை எதிர்பாராத முடிவுகளை எடுத்தால் அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது எப்படி?

இதுதான் இப்போது எழுந்துள்ள மிகப்பெரிய கேள்வி.

சோதனைச் சூழலில் நடந்ததாகக் கூறப்படும் இந்த சம்பவத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இணைய உலகில் ஒரு சிறிய பாதுகாப்புக் குறைபாடே மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடியது.

**AI வளர்ச்சி வேண்டும்... ஆனால் கடிவாளமும் வேண்டும்!**

AI வளர்ச்சியைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், அதன் வளர்ச்சிக்கு இணையாக கடுமையான பாதுகாப்பு விதிமுறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

AI ஏஜென்ட்கள் எந்த தகவல்களை அணுகலாம்? எந்த கணினி அமைப்புகளுக்குள் செல்லக்கூடாது? மனிதர்களின் அனுமதியின்றி எந்த முடிவுகளை எடுக்கக்கூடாது? என்பதற்கு தெளிவான எல்லைகள் வகுக்கப்பட வேண்டும்.

மேலும், AI எதிர்பாராத வகையில் செயல்படும் நேரத்தில் அதன் செயல்பாட்டை உடனடியாக நிறுத்தக்கூடிய 'Kill Switch' போன்ற அவசரகால பாதுகாப்பு வசதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

**மறைப்பது தீர்வல்ல!**

AI நிறுவனங்கள் இதுபோன்ற சம்பவங்களை வெளிப்படையாகப் பதிவு செய்து, அவை எவ்வாறு நிகழ்ந்தன, எந்த பாதுகாப்புக் குறைபாடு காரணமாக ஏற்பட்டது, மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

"AI என்ன செய்ய முடியும்?" என்ற கேள்விக்கு மட்டும் பதில் தேடும் காலம் முடிந்துவிட்டது.


இனி, "AI என்ன செய்யக்கூடாது?"

என்ற கேள்விக்கும் உலகம் பதில் தேட வேண்டும்.

மனிதர்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம், ஒருநாள் மனிதர்களின் கட்டுப்பாட்டையே மீறிவிடக் கூடாது. இன்று ஆய்வகத்தில் எழுந்திருக்கும் இந்த எச்சரிக்கை மணி, நாளைய உலகிற்கு மிகப்பெரிய பாடமாக இருக்க வேண்டும்.


AI–க்கு வேகம் இருக்கட்டும்...

ஆனால் அதற்கு முன் பாதுகாப்பு இருக்க வேண்டும்!



பழனி புது தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள ரெணகாளியம்மன் கோவிலில், அம்மனுக்கு புது கவசம் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து 16 வகையான சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரம், தீப ஆராதனை நடைபெற்றது. பக்தர்கள் பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி, காணியாளர் செல்வராஜ் மற்றும் விழா குழுவினர் செய்தனர்.

# தெற்கு ரயில்வே அறிவிப்பு: தமிழகத்தின் பல்வேறு வழித்தடங்களில் கூடுதல் சேவை!



சென்னை, ஆக. 29–

தெற்கு ரயில்வே சார்பில் இயக்கப்பட்டு வரும் சிறப்பு ரயில்களின் சேவை காலம், பயணிகளின் வசதிக்காக நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள நேரம், நிறுத்தங்கள் மற்றும் ரயில் பெட்டிகளின் அமைப்புடன் இந்த சிறப்பு ரயில்கள் தொடர்ந்து இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**தாம்பரம் போடிநாயக்கனூர்:**

06059 தாம்பரம்போடிநாயக்கனூர் சிறப்பு ரயில் சனிக்கிழமைகளில் செப்டம்பர் 12, 19, 26 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். மறுமார்க்கத்தில் 06060 போடிநாயக்கனூர்தாம்பரம் சிறப்பு ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் செப்டம்பர் 13, 20, 27 ஆகிய தேதிகளில் இயக்கப்படும்.

**சென்னை எழும்பூர் கன்னியாகுமரி:**

06045 சென்னை எழும்பூர்கன்னியாகுமரி சிறப்பு ரயில் வெள்ளிக்கிழமைகளில் செப்டம்பர் 4, 11, 18, 25 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். 06046 கன்னியாகுமரி சென்னை எழும்பூர் சிறப்பு ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் செப்டம்பர் 6, 13, 20, 27 ஆகிய தேதிகளில் இயக்கப்படும்.

**மங்களூரு சென்னை:**

06126 மங்களூரு சென்ட்ரல்சென்னை எழும்பூர் சிறப்பு ரயில் திங்கட்கிழமைகளில் செப்டம்பர் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். 06125 சென்னை எழும்பூர் மங்களூரு சென்ட்ரல் சிறப்பு ரயில் செவ்வாய்க்கிழமைகளில் செப்டம்பர் 8, 15, 22, 29 ஆகிய தேதிகளில் இயக்கப்படும்.

**போடனூர் சென்னை:**

06028 போடனூர்டாக்டர் எம்.ஜி.ஆர். சென்னை சென்ட்ரல் மற்றும் 06027 சென்னை சென்ட்ரல்போடனூர் சிறப்பு ரயில்கள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் செப்டம்பர் 4 முதல் 27 வரை மொத்தம் 12 பயணங்களில் இயக்கப்படும்.

**திருநெல்வேலி மேட்டுப்பாளையம்:**

06030 திருநெல்வேலிமேட்டுப்பாளையம் சிறப்பு ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் செப்டம்பர் 6, 13, 20, 27 ஆகிய தேதிகளிலும், 06029 மேட்டுப்பாளையம்திருநெல்வேலி சிறப்பு ரயில் திங்கட்கிழமைகளில் செப்டம்பர் 7, 14, 21, 28ஆகிய தேதிகளிலும் இயக்கப்படும்.

**திருநெல்வேலி தாம்பரம்:**

06166 திருநெல்வேலிதாம்பரம் சிறப்பு ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் செப்டம்பர் 6, 13, 20, 27 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். 06165 தாம்பரம்திருநெல்வேலி சிறப்பு ரயில் திங்கட்கிழமைகளில் செப்டம்பர் 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் இயக்கப்படும்.

மேலும், 06070 திருநெல்வேலிதாம்பரம் சிறப்பு ரயில் வியாழக்கிழமைகளில் செப்டம்பர் 3, 10, 17, 24 ஆகிய தேதிகளிலும், 06069 தாம்பரம்திருநெல்வேலி சிறப்பு ரயில் வெள்ளிக்கிழமைகளில் செப்டம்பர் 4, 11, 18, 25 ஆகிய தேதிகளிலும் இயக்கப்படும்.

**முன்பதிவு எப்போது?**

06126/06125, 06028/06027, 06030/06029, 06166/06165, 06070/06069 ஆகிய ரயில்களுக்கான முன்பதிவு ஏற்கனவே தொடங்கியுள்ளது.

06059/06060 மற்றும் 06045/06046 சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு 29.08.2026 காலை 8 மணிக்கு தெற்கு ரயில்வே சார்பில் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

# நவீன தொழில்நுட்பம்: கல்வியாளர் ஜெயபிரகாஷ் காந்தி விளக்கம்!




ஈரோடு. ஆக. 29 –

திண்டல் வேளாளர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் தங்கப் பதக்கம் பெற்ற முதல் நிலை கல்வியாளர் டாக்டர் ஜெயபிரகாஷ் காந்தி மாணவ மாணவிகளிடயே கல்வியின் தரம் மற்றும் வேலை வாய்ப்பு குறித்து கலந்துரையாடினார் இந் நிகழ்ச்சிக்கு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தலைவர் எஸ் டி. சந்திரசேகர் தலைமை வகித்தார். கல்லூரியின் நிர்வாக குழு உறுப்பினர் என். யுவராஜ் முன்னிலை வகித்தார்.

அப்போது அவர் மாணவ மாணவிகள் மத்தியில் பேசும்போது தொழில்நுட்பம் நிறைந்த இந்த உலகில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளை படிக்கும் மாணவ மாணவிகள் தங்களின் தனி திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் எதிர்காலத்தில் சந்திக்கக்கூடிய சவால்களை சமாளிக்க முடியும். இன்றைக்கு நீங்கள் படித்து வரும் இந்த வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி என்பது தமிழகத்தில் சிறந்த பொறியியல் கல்லூரியாக இருக்கிறது.

அதேபோல் இன்றைக்கு தொழில்நுட்பத்தை மட்டும் நீங்கள் கற்றுக் கொண்டால் போதாது. AI தொழில்நுட்பம் நீங்கள் கற்றுக் கொண்டால் முன்னோடி நிறுவனங்களில் உங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

எதிர்காலத்தில் வரவிருக்கும் புதிய பாடங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை AI மூலமாகவே செய்து விட முடியாது (மேன்பவர்) மனித உழைப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும். ப்ளூ காலர் வந்துவிட்ட நிலையில் நம் மாணவர்கள் இன்னும் ஒயிட் காலரிலே தான் இருக்கிறார்கள் இது அவர்களுக்கு ஒரு சேலஞ்ஜாகத்தான் உள்ளது.

அதேபோல் ரயில்வே துறையில் புதிய தொழில்நுட்பத்தை மத்திய அரசு கொண்டுவர உள்ளது. எந்தத் துறையானாலும் மாணவர்கள் படிப்பதோடு மட்டுமல்லாமல் துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



# கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் விஐடி இரட்டை பட்டப் படிப்பு வழங்க ஒப்பந்தம் முதல் இந்திய பல்கலைக்கழகமாக புரிந்துணர்வு!

வேலூர், ஆக. 29–


அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் விஐடி பல்கலைக்கழகம் இரட்டை பட்டப் படிப்பு மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரகத்தின் துணை தூதர் பினாய ஸ்ரீகாந்த பிரதான் தலைமையில், விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் கல்வி விவகாரங்கள் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பு துறை டீன் செனட்டர் சுலைமன் கச்சானி ஆகியோர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம், கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டை பட்டப்படிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முதல் இந்தியப் பல்கலைக்கழகம் விஐடி என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து விஐடி நிறுவனரும் வேந்தருமான கோ. விசுவநாதன் கூறும்போது, உலகத் தரத்திற்கேற்ப கல்வி வழங்குவதில் நிறுவனத்தின் உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இது விஐடி மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்திற்கு இடையிலான ஒரு மைல்கல் ஒப்பந்தமாகும். உலகின் மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றுடன் இரட்டை பட்டப்படிப்புத் திட்டத்தை வழங்கும் முதல் இந்தியப் பல்கலைக்கழகம் என்ற சிறப்பைப் பெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உலகத் தரத்திற்கேற்ற கல்வியை வழங்குவதிலும், மாணவர்களுக்கு வாழ்க்கையை மாற்றியமைக்கும் சர்வதேச கற்றல் வாய்ப்புகளை உருவாக்குவதிலும் விஐடி கொண்டுள்ள தளராத அர்ப்பணிப்பையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிப்படுத்துகிறது'' என்றார். நிகழ்வில் விஐடி துணை தலைவர் ஜி.வி.செல்வம் மற்றும் சர்வதேச உறவுகள் இயக்குநர் ஆர். சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படவிளக்கம்: அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் இரட்டைப் பட்டப்படிப்பு மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வில் பங்கேற்ற விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் மற்றும் துணை தலைவர் ஜி.வி. செல்வம் உள்ளிட்டோர்.



# தங்கம், வெள்ளி யார் அணியலாம்? அணியக்கூடாது?



ஜோதிடத்தில் தங்கம் சூரியனுடனும், வெள்ளி சந்திரன் மற்றும் சுக்கிரனுடனும் தொடர்புடைய உலோகங்களாகக் கருதப்படுகின்றன. ஒருவரது ராசி, லக்னம், பிறந்த ஜாதகத்தில் கிரகங்களின் நிலை ஆகியவற்றைப் பொறுத்து எந்த உலோகம் அணிவது ஏற்றது என்பதை ஜோதிடர்கள் தீர்மானிப்பார்கள்.

**தங்கம் அணிவதால் கிடைக்கும் பலன்கள் ஜோதிட நம்பிக்கை**

தங்கம் சூரியனின் ஆற்றலைக் குறிக்கும் உலோகம் என்று ஜோதிடத்தில் கருதப்படுகிறது.

தங்கம் அணிவதால்:

தன்னம்பிக்கை அதிகரிக்கும்

தலைமைப் பண்பு வளரும்

சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும்

மன உறுதி மேம்படும்

அதிகாரம் மற்றும் செல்வாக்கு கிடைக்கும்

தொழில் முன்னேற்றம் ஏற்படும்

என்று ஜோதிட நம்பிக்கைகள் கூறுகின்றன.

தங்கம் அணிய ஏற்ற ராசிகள்

**மேஷம்**

செவ்வாய் ஆதிக்கம் கொண்ட மேஷ ராசியினருக்கு தங்கம் பொதுவாக ஏற்றதாகக் கூறப்படுகிறது. தன்னம்பிக்கை மற்றும் செயல்திறனை அதிகரிக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

**சிம்மம்**

சூரியன் ஆட்சி செய்யும் ராசி என்பதால், சிம்ம ராசியினர் தங்கம் அணிவது மிகவும் சிறப்பானதாக ஜோதிடத்தில் கருதப்படுகிறது.

**தனுசு**

குரு ஆதிக்கம் கொண்ட தனுசு ராசியினருக்கும் தங்கம் சாதகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. வளர்ச்சி மற்றும் செல்வாக்கை அதிகரிக்க உதவும் என நம்பப்படுகிறது.

**மீனம்**

குருவின் ஆட்சி ராசியான மீனத்திற்கும் தங்கம் சில ஜாதகங்களில் ஏற்றதாகக் கருதப்படுகிறது.

**தங்கம் அணிவதில் கவனம் தேவைப்படும் ராசிகள்**

**ரிஷபம்**

சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட ரிஷப ராசியினருக்கு தங்கத்தை எப்போதும் சிறந்த உலோகம் என்று பொதுவாகக் கூற முடியாது. ஜாதகத்தைப் பார்த்து அணிவது நல்லது.

**மிதுனம்**

புதன் ஆதிக்கம் இருப்பதால் தங்கம் அணிவதற்கான முடிவு தனிப்பட்ட ஜாதகத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

**கன்னி**

கன்னி ராசியினரும் தங்கத்தை தொடர்ந்து அணிவதற்கு முன் ஜாதகத்தில் சூரியன் மற்றும் குருவின் நிலையைப் பார்க்க வேண்டும்.

**மகரம், கும்பம்**

சனி ஆதிக்கம் கொண்ட இந்த ராசிகளுக்கு தங்கம் எல்லா நேரங்களிலும் ஏற்றதாக இருக்காது என்று சில ஜோதிட முறைகள் கூறுகின்றன.

**வெள்ளி அணிவதால் கிடைக்கும் பலன்கள் ஜோதிட நம்பிக்கை**

வெள்ளி சந்திரன் மற்றும் சுக்கிரனுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

**வெள்ளி அணிவதால்:**

மன அமைதி கிடைக்கும்

உணர்ச்சிகளை சமநிலைப்படுத்த உதவும்

குடும்ப ஒற்றுமை மேம்படும்

கலை மற்றும் அழகுணர்வு வளரும்

செல்வ வளம் அதிகரிக்கும்

மன அழுத்தம் குறையும்

என்று ஜோதிட நம்பிக்கைகள் கூறுகின்றன.

**வெள்ளி அணிய ஏற்ற ராசிகள்**

**ரிஷபம்**

சுக்கிரனின் ஆட்சி ராசியான ரிஷபத்திற்கு வெள்ளி பொதுவாக ஏற்றதாகக் கருதப்படுகிறது.

**கடகம்**

சந்திரன் ஆட்சி செய்யும் கடக ராசியினருக்கு வெள்ளி மிகவும் சாதகமானதாக சில ஜோதிட முறைகள் கூறுகின்றன.

**துலாம்**

சுக்கிரனின் மற்றொரு ஆட்சி ராசியான துலாமுக்கும் வெள்ளி ஏற்றதாகக் கருதப்படுகிறது.

**மீனம்**

மன அமைதி மற்றும் உணர்ச்சி சமநிலைக்காக வெள்ளி அணிவது சில ஜோதிட முறைகளில் பரிந்துரைக்கப்படுகிறது.

**வெள்ளி அணிவதில் கவனம் தேவைப்படும் ராசிகள்**

மேஷம், சிம்மம், தனுசு போன்ற நெருப்பு தத்துவ ராசிகளுக்கு வெள்ளி எல்லா ஜாதகங்களிலும் ஒரே மாதிரியான பலனைத் தரும் என்று கூற முடியாது.

குறிப்பாக, ஜாதகத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் பலவீனமாக இருந்தால், வெள்ளி அணிவதற்கு முன் ஜாதகப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

**தங்கம் + வெள்ளி இரண்டையும் சேர்த்து அணியலாமா?**

இது தொடர்பாக ஜோதிடத்தில் மாறுபட்ட கருத்துகள் உள்ளன.

சில ஜோதிடர்கள்:

தங்கம் = சூரியன்

வெள்ளி = சந்திரன்

எனவே இரண்டையும் ஒன்றாக அணிவது எல்லோருக்கும் ஏற்றதாக இருக்காது எனக் கூறுகின்றனர்.

மற்றொரு தரப்பினர், ஜாதகத்தில் சூரியன் மற்றும் சந்திரனின் நிலை சாதகமாக இருந்தால் இரண்டையும் அணியலாம் எனக் கூறுகின்றனர். அதனால் தங்கம், வெள்ளி இரண்டையும் ஒரே நேரத்தில் அணிய வேண்டுமா என்பதை ஜாதகத்தைப் பார்த்து முடிவு செய்வது சிறந்தது.

**காலில் தங்கம் அணியலாமா?**

பாரம்பரிய இந்து வழக்கங்களில் தங்கத்தை காலில் அணிவதை பலர் தவிர்க்கின்றனர்.

**பொதுவாக:**

தங்கம் கழுத்து, காது, கை

வெள்ளி கால் கொலுசு, மெட்டி என்ற நடைமுறை அதிகமாகக் காணப்படுகிறது.

குறிப்பாக காலில் தங்கம் அணிவதை பாரம்பரிய ரீதியாக தவிர்ப்பது வழக்கம்.

**விரலில் எந்த உலோகம் அணியலாம்?**

விரலில் மோதிரம் அணிவதிலும் உலோகத்தை மட்டும் வைத்து முடிவு செய்வது சரியானதாகக் கருதப்படாது.

எந்த விரல் + எந்த உலோகம் + எந்த கிரகம் என்பதைக் கணக்கிட்டு ஜோதிடர்கள் பரிந்துரைப்பார்கள்.

எனவே வெறும் ராசியை வைத்து விலை உயர்ந்த தங்கம் அல்லது வெள்ளி மோதிரத்தை அணிவதைவிட, ஜாதகத்தின் அடிப்படையில் முடிவு செய்வது நல்லது. முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது

**தங்கம் அணியலாம் என்று கூறப்படுபவர்கள்:**

மேஷம், சிம்மம், தனுசு, சில சந்தர்ப்பங்களில் மீனம்

வெள்ளி அணியலாம் என்று பொதுவாகக் கூறப்படுபவர்கள்:

ரிஷபம், கடகம், துலாம், மீனம்

ஆனால் "இந்த ராசிக்காரர்கள் கண்டிப்பாக தங்கம் அணியக்கூடாது'' அல்லது "இந்த ராசிக்காரர்கள் கண்டிப்பாக வெள்ளி அணியக்கூடாது'' என்று பொதுவாக முடிவு செய்வது துல்லியமான ஜோதிட விதி அல்ல. லக்னம், நவகிரக நிலை, தசா–புக்தி உள்ளிட்ட ஜாதக அம்சங்களும் முக்கியம்.

**குறிப்பு:** மேலே கூறப்பட்டவை பாரம்பரிய ஜோதிட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. உலோகத்தை அணிவதால் குறிப்பிட்ட உடல்நல அல்லது வாழ்க்கை பலன்கள் உறுதியாக ஏற்படும் என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை.



தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், ஜெயமங்கலம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.




# H1N1 தடுப்புக்கு உணவும் முக்கியம்!



H1N1 எனப்படும் பன்றிக்காய்ச்சலைத் தடுக்க கைகளை சுத்தமாக வைத்திருத்தல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். அதே நேரத்தில், உடலின் இயல்பான நோய் எதிர்ப்பு செயல்பாட்டை வலுப்படுத்தும் உணவுப் பழக்கமும் முக்கியம் என ஊட்டச்சத்து நிபுணர் நிகிதா கார்க் தெரிவித்துள்ளார்.


புரதச்சத்து நிறைந்த முட்டை, தயிர், பனீர் போன்ற உணவுகளை தேவைக்கேற்ப சேர்த்துக் கொள்வது நோய் எதிர்ப்பு செல்கள் மற்றும் ஆன்டிபாடிகளின் இயல்பான உருவாக்கத்துக்கு உதவும். வைட்டமின் D, A மற்றும் துத்தநாகம் (Zinc)ஆகிய சத்துகளும் நோய் எதிர்ப்பு செயல்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**தூக்கமும் முக்கியம்!**

சமச்சீரான உணவுடன் போதுமான தூக்கம், வழக்கமான உடற்பயிற்சி மற்றும் குடல் ஆரோக்கியத்தைப் பராமரித்தல்ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். அதிகப்படியான சர்க்கரை மற்றும் மதுபானம் உட்கொள்வதைத் தவிர்ப்பதும் நல்லது.

ஒரே ஒரு உணவு அல்லது 'ஆன்டிவைரல்' உணவை சாப்பிடுவதால் உடனடியாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்காது. சத்தான உணவு, போதுமான தூக்கம், உடற்பயிற்சி மற்றும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதே H1N1 உள்ளிட்ட தொற்றுகளை எதிர்கொள்ள உடலுக்கு தேவையான ஆதரவை வழங்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# கோயில் சொத்துகளுக்கு என்ன ஆனது? பதிவேடுகள் பராமரிப்பில் பெரும் அலட்சியம்!



மதுரை, ஆக. 29–

இந்து சமய அறநிலையத்துறைக்கு ட்பட்ட பல கோயில்களில் பதிவேடுகள் பராமரிக்கப்படாத நிலையில், கோயில் வருவாய், சொத்துக்களின் நிலை கேள்விக்குறியாகி உள்ளது.

இத்துறையின் கீழ் 43,676 கோயில்கள், 45 மடங்கள், 80 கோயில்களுடன் இணைந்த மடங்கள், 2,517 அறக்கட்டளைகள், 23 சமண கோயில்கள் உள்ளன. வருவாயைப் பொறுத்து முதல்நிலை, இரண்டாம் நிலை கோயில்கள் என நிர்வாக வசதிக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கோயில்களிலும் அடிப்படை பதிவேடுகளான சொத்து, திட்டம், கட்டளை பதிவேடு போன்றவை பராமரிக்கப்பட வேண்டும். ஆனால் பெரும்பாலான கோயில்களில் நீண்ட காலமாக பதிவேடுகள் புதுப்பிக்கப்படாமலும், ஆய்வு செய்யப்படாமலும் உள்ளன.

"பதிவேடுகள் ஆய்வு செய்யப்படாததால் கோயில் வருவாய், சொத்துக்களின் நிலை கேள்விக்குறியாகி உள்ளது" என.குழு உள்ள நிலையில் பல ஆண்டுகளாக பல கோயில்களின் நகைகள் முறமதிப்பீடு மற்றும் பின் சேர்க்கை மதிப்பீடு செய்யப்படாமல் உள்ளது. இந்த அலுவலர்களின் பணி குறித்து ஆய்வு செய்யப்பட்டதா என அதிகாரிகளுக்கே வெளிச்சம். முக்கியமான கணக்கு பணிகளை மேற்கொள்ள வேண்டிய செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், அவர்களுக்கான பணியிடங்களில் அல்லாமல் பெரிய கோயில்களில் அயல் பணியில் பணியிடமாற்றப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

அறநிலையத்துறை ஊழியர்கள் கூறியதாவது: இத்துறையின் முதன்மையான பணிகளில் ஒன்றான இவ்வகைகளை செய்யாமல் பிற பணிகளில் அதிகாரிகள் கவனம் செலுத்துகிறார்கள். குறிப்பாக நகை மதிப்பீடு செய்ய மண்டலத்திற்கு ஒரு துணை கமிஷனர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக பல கோயில்களில் உள்ள நகைகளின் நிலை மற்றும் மதிப்பீடு முறையாக செய்யப்படாமல் உள்ளது.

குழு உள்ள நிலையில் பல ஆண்டுகளாக பல கோயில்களின் நகைகள் முறமதிப்பீடு மற்றும் பின் சேர்க்கை மதிப்பீடு செய்யப்படாமல் உள்ளது. இந்த அலுவலர்களின் பணி குறித்து ஆய்வு செய்யப்பட்டதா என அதிகாரிகளுக்கே வெளிச்சம்.

முக்கியமான கணக்குப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், அவர்களுக்கான பணியிடங்களில் அல்லாமல் பெரிய கோயில்களில் அயல் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. பெரிய கோயில்களில் உள்ள கண்காணிப்பாளர்களை அவர்களின் அலுவலகங்களுக்கு திரும்பப் பெற்று அறநிலையத்துறையின் செயல்பாட்டை சீர்படுத்த வேண்டும்

# வேலை வாய்ப்பு

## டி.எம்.பி. வங்கியில் வேலைவாய்ப்புகள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மொர்க்கன்டைல் வங்கி லிமிடெட் (TMB)
பணியின் தன்மை: நிரந்தர பணி (Regular Basis)
பணியிடங்கள்:
வாடிக்கையாளர் சேவை நிர்வாகி (Customer Service Executive)
உதவி மேலாளர் (Assistant Manager)
Specialist Officer (IT): சிறப்பு அதிகாரி (தகவல் தொழில்நுட்பம்)
Agricultural Officer: வேளாண்மை அதிகாரி
கல்வித்தகுதி;
ஏதேனும் பட்டப்படிப்பு, B.E./B.Tech, M.E./M.Tech, MCA வேளாண்மையில் இளங்கலைப் பட்டம் (Bachelor Degree in Agriculture)
பணியிடம்: சென்னை, தமிழ்நாடு
விண்ணப்பம் தொடங்கிய தேதி: 24.08.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 06.09.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்– https://apps.tmbdigital.bank.in/
அதிகாரப்பூர்வ இணையதளம்:
TMB அதிகாரப்பூர்வ விண்ணப்ப இணையதளம்

# மீனாட்சி அம்மன் கும்பாபிஷேகம்: அன்னதானத்துக்கு கட்டுப்பாடு!



மதுரை, ஆக. 29–

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேகம் செப். 17–ல் நடைபெற உள்ள நிலையில், பக்தர்களுக்காக அன்னதானம், நீர்மோர், பிற உணவுப் பொருட்களை வழங்குவோர் ஆன்லைனில் பதிவுச்சான்றிதழ் பெற வேண்டும் என உணவுப் பாதுகாப்புத்துறை உத்தரவிட்டுள்ளது.

கோயில்களில் அன்னதானம், பிரசாதங்கள் தயாரித்து வழங்குவதற்கான பிரத்தியேக 'போக்ச்' சான்றிதழை மதுரை மத்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம் வழங்குகிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் உண்டியல் போக்ச் சான்றிதழ் பெறப்பட்டுள்ள நிலையில், பக்தர்களுக்கு உணவு வழங்கும் அனைவரும் உணவுப் பாதுகாப்புத்துறையின் சான்றிதழ் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாகசாலை, கும்பாபிஷேகத்தின் போது மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள மாதி வீதிகள், ஆவணி மூல வீதிகள், மராட்ட வீதிகளில் பக்தர்கள் இலவசமாக அன்னதானம், பிரசாதம், நீர்மோர், இனிப்பு, சாம்பார் உள்ளிட்ட உணவுகளை வழங்குவர். இவர்கள் உணவுப் பாதுகாப்புத்துறையின் கீழ் பதிவு செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு வழங்கும் உணவுப்பொருட்களில் செயற்கை சாயங்கள் பயன்படுத்தக்கூடாது. அரசால் தடை செய்யப்பட்ட பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் கப்புகளைத் தவிர்க்க வேண்டும். உணவு தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் வாங்கும் போது அவற்றின் தயாரிப்பு, காலாவதி தேதிகளை சரிபார்க்க வேண்டும்.

**வசதிகளை நிறைவேற்ற வழக்கு: உயர்நீதிமன்றம் தலையீடு!**

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தையொட்டி அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தொடர்ந்து, மதுரை மாநகராட்சி அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அறிவுறுத்தியுள்ளது.

காரைக்குடி வழக்கறிஞர் மணிகண்டன் தாக்கல் செய்த பொதுநல மனு தொடர்பாக, கோயிலில் ரூ.50 லட்சம் வரிசைக் கட்டணத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், அதை முறைப்படுத்த வேண்டும் என்றும் கோயில் செயல் அலுவலருக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. பரிசீலிக்க உத்தரவிட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்தர்களின் பாதுகாப்பும், உணவின் தரமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே முக்கிய நோக்கம்.

# அனைத்து அரசு பேருந்துகளிலும் இலவச பயணம்?




சென்னை, ஆக. 29–

தமிழ்நாட்டில் SETC பேருந்துகளைத் தவிர, பிற அனைத்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவச பயணத் திட்டத்தை விரிவுபடுத்த தமிழக அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

தற்போது சென்னையில் 3,633 பேருந்துகளிலும், வெளி மாவட்டங்களில் 9,000–க்கும் மேற்பட்ட பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவச பயணம் நடைமுறையில் உள்ளது.

அடுத்தகட்டமாக விழுப்புரம், கும்பகோணம், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மண்டலங்களில் இயக்கப்படும் அனைத்து அரசு பேருந்துகளிலும் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது.

இதற்கான நிதிச்சுமை மற்றும் பேருந்துகளின் எண்ணிக்கை குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையை பரிசீலித்த பிறகு, தமிழக அரசு அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சினிமா துளிகள்..!

### அருள்நிதி-அமீர் கூட்டணியில் 'வேட்ட சாமி'!




அருள்நிதி, அமீர் இணைந்து நடிக்கும் 'வேட்ட சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் கிளிம்ப்ஸ் வெளியாகி ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. M. செல்வகுமார் இயக்கும் இப்படம், நெல்லை பகுதியின் சங்கிலி பூதத்தார், சுடலை மாடன் உள்ளிட்ட குலதெய்வ வழிபாடுகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது.

சாதி, மத வேறுபாடுகளைத் தாண்டி தலைமுறைகளாக தொடரும் சமூகப் பிரச்சினைகளைப் பேசும் ஆக்ஷன் எமோஷனல் டிராமாவாக இப்படம் உருவாகிறது. படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜிப்ரான் இசை, ஆர்.டி. ராஜசேகர் ஒளிப்பதிவு, ரூபன் படத்தொகுப்பு மேற்கொள்கின்றனர். 7 Miles Per Second Productions சார்பில் சாமுவேல் மேத்யூ தயாரிக்கிறார்.

### அஜித் ரசிகர்களுக்கு 'செம ட்ரீட்!' 'கிளாடியேட்டர்ஸ்' டிரெய்லர் ரெடி!



அஜித்தின் சர்வதேச ரேசிங் பயணத்தை மையமாகக் கொண்ட 'கிளாடியேட்டர்ஸ் இன் பர்சூட் ஆப் சேலஞ்சஸ்'ஆவணப்படத்தின் டிரெய்லர் சென்சார் பணிகள் நிறைவடைந்துள்ளன. துபாய், அபுதாபி மற்றும் ஐரோப்பிய ரேசிங் போட்டிகளில் அஜித் பங்கேற்ற காட்சிகளும், 2025 துபாய் 24H போட்டியில் அவர் பெற்ற போடியம் சாதனையும் இதில் இடம்பெறுகின்றன. இயக்குநர் ஏ.எல். விஜய், இசை ஜி.வி. பிரகாஷ். டிரெய்லர் ரன்னிங் டைம்: 3 நிமிடம் 49 விநாடிகள்

### 'டாக்ஸிக்' படத்துக்கு நெகட்டிவ் விமர்சனம்! யூடியூபர்களுக்கு படக்குழு நோட்டீஸ்!



யஷ் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'டாக்ஸிக்' திரைப்படம், ஓவர் பில்டப், வன்முறை மற்றும் பாலியல் காட்சிகள் உள்ளிட்ட காரணங்களால் கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது. இருப்பினும் முதல் நாளில் ரூ.150 கோடிக்கும் மேல் வசூலித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், படத்தை விமர்சித்த சில யூடியூபர்கள் மற்றும் எக்ஸ் தளப் பயனர்களுக்கு தயாரிப்பு நிறுவனம் சார்பில் சட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே பொய்யான அல்லது இழிவான கருத்துகளை வெளியிடக்கூடாது என நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

# உலகச் சந்தையை குறிவைத்து டிவிஎஸ் எடுத்த அதிரடி முடிவு!




சென்னை, ஆக. 29–

தமிழ்நாட்டை தலைமையிடமாகக் கொண்டு இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் வர்த்தகம் செய்து வரும் டிவிஎஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் அடுத்த தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) தற்போது சர்வதேசத் தலைவராகப் பணியாற்றி வரும் பெய்மன் கார்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெய்மன் கார்கர் 2027 ஜனவரி 27–ம் தேதி புதிய சிஇஓவாக பொறுப்பேற்று பணியைத் தொடங்குவார். அதுவரை தற்போதைய சிஇஓ கே.என். ராதாகிருஷ்ணன் தொடர்ந்து பதவியில் இருப்பார். மேலும், 2027 ஜூலையில் நடைபெற உள்ள நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் வரை கே.என். ராதாகிருஷ்ணன் தனிப்பட்ட இயக்குநராக தொடர்ந்து பணியாற்றுவார்.

**உலகச் சந்தையில் டிவிஎஸ் வேகம்!**

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் டிவிஎஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தில் இணைந்த பெய்மன் கார்கர், சர்வதேச வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து வருகிறார்.

டிவிஎஸ் மோட்டார்ஸின் மொத்த விற்பனையில் சர்வதேச வர்த்தகம் தற்போது 29 சதவீத பங்களிப்பை அளித்து வருவதுடன், அந்தப் பிரிவில் 33 சதவீத வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சந்தைகளை விரிவுபடுத்துவதும், வெளிநாடுகளில் கையகப்படுத்தப்பட்ட பிராண்டுகளை மேலும் வளர்ப்பதும் டிவிஎஸ் நிறுவனத்தின் முக்கிய இலக்குகளாக உள்ளன. இதற்கு ஏற்ற வகையில் பெய்மன் கார்கர் சிஇஓவாக நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.


**30 ஆண்டுகளுக்கும் மேலான ஆட்டோமொபைல் அனுபவம்!**

டிவிஎஸ் மோட்டார்ஸில் இணைவதற்கு முன்பு ஐரோப்பா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை பெய்மன் கார்கர் வகித்துள்ளார்.

Groupe Renault, Nissan, Infiniti உள்ளிட்ட முன்னணி ஆட்டோமொபைல் நிறுவனங்களில் பணியாற்றியுள்ள அவருக்கு, இத்துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது.

உலகளாவிய விரிவாக்கத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில் புதிய சிஇஓ நியமனம் அமைந்துள்ளதாக டிவிஎஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஊட்டி, கொடைக்கானலில் பாக்கெட் பாலுக்கு தடை!



சென்னை, ஆக. 29–

ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலை வாசஸ்தலங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுக்க, பாக்கெட் பால் விற்பனையை நிறுத்தி தானியங்கி பால் விற்பனை இயந்திரங்களை அமைக்க தனியார் பால் நிறுவனங்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆவின் நிறுவனத்தின் சோதனை முயற்சியில், கொடைக்கானலில் 2 நாட்களில் 40 லிட்டரும், ஊட்டியில் 6 லிட்டரும் மட்டுமே இயந்திரங்கள் மூலம் விற்பனையானது. இதையடுத்து, பால் இயந்திரங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்; இயந்திரங்கள் செயல்படும் பகுதிகளில் பாக்கெட் பால் விற்பனையை முற்றிலும் நிறுத்த வேண்டும் என நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# எம்.எஸ்.சுப்புலட்சுமி வாழ்க்கை வரலாறு படத்தில் ராஷ்மிகா!



பிரபல கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக உருவாகிறது.தெலுங்கு இயக்குநர் கௌதம் தின்னனூரி இயக்கும் இப்படத்தில், சுப்புலட்சுமி கதாபாத்திரத்தில் நடிக்க ராஷ்மிகா மந்தனா இறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக த்ரிஷா, நயன்தாரா, சாய் பல்லவி, ருக்மிணி வசந்த் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இப்படம் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு செப்டம்பர் 16–ம் தேதி, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பிறந்தநாளில் வெளியாகும் என தெலுங்கு திரையுலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் நியமனம்!



ராமநாதபுரம், ஆக. 29–

ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் புதிய நிர்வாகிகளை நியமிப்பதற்கான இயக்க மறுசீரமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்ட ஆலோசனைக் கூட்டம் தனியார் மகாலில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ராஜாராம் பாண்டியன் தலைமை வகித்தார். அரியலூர் முன்னாள் மாவட்டத் தலைவர் ஜி. ராஜேந்திரன், இயக்க மறுசீரமைப்பு திட்டத்தின் பார்வையாளராக பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். ராமநாதபுரம், திருவாடானை, பரமக்குடி (தனி), முதுகுளத்தூர் ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 150 மண்டலத் தலைவர்கள் நியமிக்கப்பட உள்ள நிலையில், அதற்கான விண்ணப்பப் படிவங்கள் நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டன.



# இன்றைய கார்ட்டூன்

## “பேச்சு போதும்... பதில் எங்கே?”




# எங்களை வழிமறித்து கூட பொதுமக்கள் பிரச்சனைகளை சொல்லலாம்: அமைச்சர் நிர்மல்குமார்!

மதுரை, ஆக. 29–

மதுரை காந்தி மியூசியத்தில் தனியார் பள்ளி சார்பில் இன்று போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதனை சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

போதை பொருட்கள் சாக்லெட் உள்ளிட்ட எல்லா வடிவிலும் கிடைக்கிறது. இதுகுறித்து தெரிந்தால் மாணவர்கள் உடனே ஆசிரியரிடம் சொல்ல வேண்டும். இது உங்கள் அண்ணனோட அரசு. நீங்கள் எல்லாம் சேர்ந்து உருவாக்கிய அரசு தான் இது. 100 சதவீத உரிமை உங்களுக்கு உள்ளது.



மாணவ–மாணவிகளாகிய நீங்கள் பள்ளிக்கு செல்லும்போது இடையூறு வந்தாலோ, போதை பொருள் விற்பனை தொடர்பாக எந்த சந்தேகம் இருந்தால், எந்த பயமுமின்றி ஆசிரியர்களிடம் கூறுங்கள். உங்களுக்கு வேலை பார்க்க தான் த.வெ.க. அரசு உள்ளது. போதை பொருள் தடுக்கும் நடவடிக்கை தொடர்பாக நீங்கள் மற்றவர்களிடம் எடுத்து கூற வேண்டும். காவல்துறை முன்புபோல இல்லை.

குழந்தைகளின் பாதுகாப்பு தான் முதலமைச்சர் விஜய்யின் முதல் முன்னுரிமை. பொதுமக்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் நாங்கள் செல்லும்போது எங்களை வழி மறித்து கூட சொல்லுங்கள். கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் கோபிசன், மதார் பதூருதின் என்ற முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் கால விடுமுறை: முடிவை தெரிவிக்க அரசுக்கு கெடு - மதுரை ஐகோர்ட்டு!

மதுரை, ஆக. 29–

பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் கால விடுமுறை வழங்குவது குறித்து வருகிற 17–ந்தேதி அரசின் முடிவை தெரிவிக்க வேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டு கெடு விதித்ததுடன் தவறினால் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.



மதுரை கோமதிபுரத்தைச் சேர்ந்த நர்மதா என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், “தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்டவைகளில் பணியாற்றும் பெண்கள், கடுமையான மாதவிடாய் வலியால் அவதிப்படுகின்றனர். அதனை சமாளித்தபடியே பணியாற்ற வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டபோது, தமிழகத்தில் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் கால விடுப்பு வழங்கும் கொள்கை இல்லை என தெரிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக பெண்கள் எதிர்கொள்ளும் உடல்நல பிரச்சினைகள், ஊதிய இழப்பு மற்றும் பணியிட சிரமங்கள் குறித்து விளக்கி தமிழக அரசுக்கு விரிவான மனு அளித்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. மாதவிடாய் என்பது இயற்கையான உயிரியல் செயல்முறை. எனவே தமிழகத்தில் பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் கால ஊதிய விடுப்பு வழங்குவது குறித்த கொள்கையை அரசு உருவாக்க உத்தரவிட வேண்டும்” என்று கூறியிருந்தார். இதுகுறித்து பதில் அளிக்க தமிழக அரசுக்கு ஏற்கனவே உத்தரவிடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு வக்கீல் ஆஜராகி, தற்போது தமிழக சட்டசபை நடந்து வருகிறது. இதனால் இந்த விவகாரத்தில் கொள்கை சார்ந்த முடிவு எடுப்பதற்கு தாமதம் ஆகிறது. இதற்கு உரிய அவகாசம் வேண்டும் என்றார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கு வருகிற செப்டம்பர் 17–ந்தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அன்றைய தினம் இந்த விவகாரத்தில் இறுதியான முடிவை அரசு தெரிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். தவறும் பட்சத்தில் இந்த வழக்கில் உரிய உத்தரவை பிறப்பிப்போம் என்று அறிவுறுத்தி விசாரணையை ஒத்திவைத்தனர்.

# நேபாள வெள்ளம்: பலி- 626, மாயம்- 2,500

காத்மாண்டு, ஆக. 29–

நேபாளத்தின் போடேகோஷி நதியில் கடந்த 26–ந்தேதி காலையில் ஏற் பட்ட பெருவெள்ளம் அந்த நாட்டின் சீன எல்லையை ஒட்டிய பிராந்தியம் முழுவதையும் சீர்குலைத்தது. போடேகோஷியின் கிளை நதியான லெண்டேயின் நீரோட்டத்தை பனிச்சரிவு ஒன்று தடுத்ததால் உருவான ஏரி உடைந்து இந்த காட்டாற்று வெள் ளம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. வெள்ளம் மட்டுமின்றி பாறைகள், மண், சேறு என பெரும் பிரளயமே அங்கு ஏற்பட்டது. சுனாமி அலைகளையே மிஞ்சும் அளவுக்கு ஏற்பட்ட பெருவெள்ளம் கண் இமைக்கும் நேரத்தில் நீர்மின் நிலையங்கள், பாலங்கள், சாலைகள், செல்போன் கோபுரங்கள், வீடுகள் உள்ளிட்ட கட்டிடங்கள் என அனைத்தையும் வாரிச்சுருட்டி சென்றது.

சீனாவை ஒட்டியுள்ள நேபாளத்தின் 8 மாவட்டங்களை புரட்டிப்போட்ட இந்த பேரிடர், ரசுவா, நுவாகோட், தடிங் ஆகிய 3 மாவட்டங்களை முழு மையாக உருக்குலைத்து இருக்கிறது.சேறும், சகதியுமாக காட்சியளிக்கும் இந்த பிராந்தியம் முழுவதும் பார்ப் போரை பதறவைக்கிறது. இமயமலையில் இருந்து அடித்து வரப்பட்ட கற் கள், மண், சேறு, சகதி அனைத்தும் பல அடி உயரத்துக்கு நிறைந்து இருக்கிறது.



ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ள நிலையில், அவர்களில் பலரும் உயிரிழந்திருப்பது கண்டறியப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த பேரிடரில் பலியானோர் எண்ணிக்கை 626 ஆக உயர்ந்துள்ளது. 2,500–க்கும் மேற்பட்டோரை காணவில்லை என்பதால் மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

போடோகோஷி ஆற்றில் மீண்டும் சேறு மற்றும் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், மீண்டும் ஒரு வெள்ளம் ஏற்படலாம் என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். போடோகோஷி மற்றும் திரிசுலி பகுதிகளில் இருக்கும் மக்கள் மற்றும் மீட்பு பணியாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அதிரடி முடிவு; சேகர்பாபுவுக்கு விழுந்த பேரிடி?

சென்னை, ஆக. 29–

சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு திமுகவில் மாவட்ட அமைப்புகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்து ள்ளன.



77 ஆக இருந்த மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கை 110 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, முன்னாள் அமைச்சர் சேகர்பாபுவிடம் இருந்த 6 சட்டமன்றத் தொகுதிகளில் கொளத்தூர், எழும்பூர், அம்பத்தூர் ஆகிய 3 தொகுதிகள் சென்னை வடக்கு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் சேகர்பாபுவின் பொறுப்பில் தற்போது துறைமுகம், திரு.வி.க. நகர், வில்லிவாக்கம் ஆகிய 3 தொகுதிகள் மட்டுமே இருக்கும் என கூறப்படுகிறது. கொளத்தூர் தொகுதியில் மு.க.ஸ்டாலினின் தேர்தல் தோல்விக்கு சேகர்பாபுவின் களப்பணி குறைபாடும் காரணம் என கட்சியினர் சிலர் குற்றம்சாட்டி யதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், இந்த மாற்றம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தங்கம் விலை அதிரடி குறைவு!

சென்னை, ஆக. 29–

தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,360 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,16,040–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.295 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,505–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு ரூ.5 குறைந்து ரூ.260–க்கும், கிலோவுக்கு ரூ.5 ஆயிரம் குறைந்து ரூ.2 லட்சத்து 60 ஆயிரத்திற்கும் விற்பனையாகி வருகிறது.



# UGC-NET ஜூன் 2026 தேர்வு முடிவுகள் வெளியீடு!

புதுடெல்லி, ஆக. 29–

தேசிய தேர்வு முகமை 84 பாடங்களுக்கான UGC–NET ஜூன் 2026 தேர்வு முடிவுகளை அறிவித்துள்ளது. தேர்வில் பங்கேற்ற மாணவர்கள், ugcnet.nta.nic.in என்ற அதிகாரப்பூர்வ UGC–NET இணையதளம் மூலம் தங்களின் மதிப்பெண் அட்டைகளை சரிபார்த்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




யுஜிசி–நெட் ஜூன் 2026 தேர்வானது, 87 பாடங்களுக்கு, ஜூன் 22 முதல் 30, 2026 வரை நடத்தப்பட்டது. ஒரு விண்ணப்பதாரர் தகுதிபெறும் பிரிவைப் பொறுத்து, இந்த தேர்வு இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகை (JRF) பெறுவதற்கும், உதவி பேராசிரியராக நியமனம் பெறுவதற்கும், மற்றும் முனைவர் பட்ட படிப்புகளில் சேர்வதற்கும் உள்ள தகுதியை தீர்மானிக்கிறது.

தேர்வர்கள் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றித் தங்களின் மதிப்பெண் அட்டைகளைச் சரிபார்க்கலாம்:

ugcnet.nta.nic.in என்ற அதிகாரப்பூர்வ UGC–NET இணையதளத்தை பார்வையிடவும்.

முகப்புப் பக்கத்தில் உள்ள சமீபத்திய அறிவிப்புகள் அல்லது முடிவு பகுதிக்கு செல்ல வேண்டும்.

UGC–NET ஜூன் 2026 தேர்வு முடிவு இணைப்பை கிளிக் செய்ய வேண்டும்.

விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதி போன்ற தேவையான உள்நுழைவு விவரங்களை உள்ளிட வேண்டும்.

UGC–NET தேர்வு முடிவு மற்றும் மதிப்பெண் அட்டையைக் காண விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மதிப்பெண் அட்டையைப் பதிவிறக்கம் செய்து, எதிர்கால சேர்க்கை அல்லது ஆட்சேர்ப்பு தொடர்பான தேவைகளுக்காக ஒரு நகலை வைத்துக்கொள்ள வேண்டும்.

2026 செப்டம்பர் 09 மற்றும் 10 ஆகிய தேதிகளில் மறுதேர்வு நடத்தப்படவுள்ள ஆங்கிலம், வணிகவியல் மற்றும் சமூகவியல் பாடப்பிரிவுகளை சேர்ந்த தேர்வர்கள், UGC–NET ஜூன் 2026 மதிப்பெண் அட்டையை அணுக முயற்சிக்கும்போது, “தவறான விண்ணப்ப எண்/கடவுச்சொல்” என்ற செய்தியைப் பெறக்கூடும்.

இந்த தேர்வர்களுக்கான மதிப்பெண் பட்டியல் மற்றும் தேர்வு முடிவுகள், அவர்களுக்கான மறுதேர்வு நடத்தப்பட்ட பின்னரே வெளியிடப்படும்.

NTA, ஆங்கிலப் பாடத்திற்கான மறுதேர்வை செப்டம்பர் 9 (ஷிப்ட் 1) அன்றும், வணிகவியல் பாடத்திற்கு செப்டம்பர் 9 (ஷிப்ட் 2) அன்றும், சமூகவியல் பாடத்திற்கு செப்டம்பர் 10 (ஷிப்ட் 1) அன்றும் திட்டமிட்டுள்ளது.

# ஏர் இந்தியா விமானங்களில் தொடரும் தொழில்நுட்ப கோளாறுகள்!

புதுடெல்லி, ஆக. 29–

ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்களில் சமீப காலமாக அடுத்தடுத்து தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் விமானங்கள் தாமதம், அவசர தரையிறக்கம், பயணத் திட்டம் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சிரமங்களை பயணிகள் சந்தித்து வருகின்றனர்.



**கடந்த ஓராண்டில் நடைபெற்ற முக்கியமான 10 சம்பவங்கள்:**

**ஆகஸ்ட் 2026**

**புக்கெட்–டெல்லி விமானம்:** தாய்லாந்தின் புக்கெட்டில் இருந்து டெல்லி வந்த ஏர் இந்தியா விமானம் நடுவானில் கடுமையாக குலுங்கியது. விமானம் சில நொடிகளில் சுமார் 300 அடி கீழே செங்குத்தாகச் சரிந்ததில் 24 பேர் காயமடைந்தனர். பின்னர் விமானம் டெல்லியில் பாதுகாப்பாக தரையிறங்கியது.

**கொல்கத்தா–சென்னை விமானம்:** ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் ஏற்பட்ட கடுமையான தொழில்நுட்ப கோளாறால் 6 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. பயணிகளுக்கு முறையான உணவு மற்றும் தகவல் வழங்கப்படவில்லை எனக் கூறி, கொல்கத்தா விமான நிலையத்தில் பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**மே 2026**

**டெல்லி – சான் பிரான்சிஸ்கோ விமானம்:** 230 பயணிகளுடன் சென்ற ஏர் இந்தியா விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சீன வான்வெளியில் இருந்து மீண்டும் டெல்லிக்குத் திரும்பியது.

**பெங்களூரு–டெல்லி விமானம்:** 171 பயணிகளுடன் சென்ற ஏர் இந்தியா ஏ320 விமானத்தின் இன்ஜினில் தீப்பிடித்தது. இதையடுத்து விமானி அவசரநிலையை அறிவித்து, விமானத்தை டெல்லியில் பாதுகாப்பாக தரையிறக்கினார்.

**மார்ச் 2026**

**டெல்லி–லண்டன் விமானம்:** ஏர் இந்தியா A350–900 விமானம் சவுதி அரேபிய வான்வெளியில் பறந்தபோது திடீர் அதிர்வுகள் மற்றும் விசித்திரமான சத்தங்கள் ஏற்பட்டன. பாதுகாப்பு காரணங்களுக்காக சுமார் 7 மணி நேரப் பயணத்துக்குப் பிறகு விமானம் டெல்லிக்கே திரும்பியது.

**நியூயார்க்–டெல்லி விமானம்:** சுமார் 300 பயணிகளுடன் வந்த ஏர் இந்தியா A350 விமானத்தில் நடுவானில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதனால் விமானம் அயர்லாந்தின் ஷானன் விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டு அவசரமாக தரையிறக்கப்பட்டது.

**அக்டோபர் 2025**

**மும்பை நெவார்க் விமானம்:** அமெரிக்காவின் நெவார்க் நகருக்குப் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் (AI 191), நடுவானில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் மும்பை விமான நிலையத்துக்கு திரும்பி அவசரமாக தரையிறக்கப்பட்டது.

**ஆகஸ்ட் 2025**

**திருவனந்தபுரம்–டெல்லி விமானம்:** 150 பயணிகளுடன் சென்ற ஏர் இந்தியா விமானத்தில் நடுவானில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, விமானம் அவசரமாக சென்னை விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டது.

**ஜூலை 2025**

**கோழிக்கோடு–தோஹா விமானம்:** ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் கேபின் ஏர் கண்டிஷனிங் அமைப்பில் கோளாறு ஏற்பட்டது. பயணிகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்க, சுமார் 2 மணி நேரத்துக்குப் பிறகு விமானம் மீண்டும் கோழிக்கோட்டில் தரையிறக்கப்பட்டது.

**ஜூன் 2025**

**ஆமதாபாத்–லண்டன் விமான விபத்து:** ஆமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கிப் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விமானம் மருத்துவக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தின் மீது மோதி வெடித்துச் சிதறியதில், விமானத்தில் இருந்தவர்கள் மற்றும் தரையில் இருந்தவர்கள் உள்பட மொத்தம் 260 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஓராண்டில் மட்டும் ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகளை சந்தித்துள்ளன. இதனால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதுடன், பயணிகளும் தொடர்ந்து பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020